Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் : சித்திரம்

வாரம் : மார்ச் 1

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

**தேர்ச்சி** : **வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திரம், சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப்பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம்** : **வரலாற்று ரீதியான கட்டட நிர்மாணங்கள் சார்ந்த கலையம்சங்களை அறிவார்.**

**செயற்பாடு** : **சுந்திரவட்டக்கல்**

**ஒப்படை** : **பின்வரும் வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.**

## வாசிப்புப் படிவம்

### சந்திரவட்டக்கல்

வணக்கஸ்தலமொன்றுக்குள் நுழையும் போது படிக்கட்டின் முன்னால் அமைந்த அரைவட்டக் கற் செதுக்கல் வேலைப்பாடானது சந்திர வட்டக்கல் ஆகும்

சூரிய, சந்திரகல, அடசந்த பகன, பாட்டிக்கா எனும் பெயர்களாலும் இது அழைக்கப்படுகிறது.

ஆரம்பக் காலத்தில் சதுர வடிவ அமைப்பைக் கொண்ட கல்லாக இருந்து அனுராதப்புர, பொலன்னறுவைக் காலத்திலேயே பின்னர் அரைவட்ட வடிவமாக வளர்ச்சியடைந்தது. கண்டிக் காலத்தில் முக்கோண வடிவமாக மாற்றமடைந்தது.

அத்துடன் ஆரம்பக் காலத்தில் செதுக்கல்களி -ன்றி காணப்பட்ட சந்திர வட்டக்கல்லில் படிப்படியாக செதுக்கல்கள் உள்ளடக்கப்பட்டு உன்னத கலைப்படைப்பானது.

அரைவட்டங்களாக அமைந்த ஐந்து வரிசைக -ளைக் கொண்ட சந்திரவட்டக்கல்லின் ஒவ்வொரு வரிசையும் அலங்காரமான செதுக்கல்களைக் கொண்டது.

சந்திர வட்டக்கல்லின் ஒவ்வொரு வரிசையின் செதுக்கல்கள் தொடர்பாக பேராசிரியர் செனரத் பரணவித்தான அவர்கள் தெரிவித்த கருத்து பின்வருமாறு அட்டவணை விளக்குகிறது,

| நிரை | பொழியப்பட்டுள்ள செதுக்கல் | பொருள் |
|---|---|---|
| 1 | தீச்சுடர் | பேராசை,காமம் ஆகிய நெருப்பு |
| 2 | சத்வாவலிய (யானை,குதிரை,பசு,சிம்மம்) | ஜாதி,வயோதிபம்,வியாதி, மரணம் |
| 3 | கொடிவலை அலங்காரம் | பேராசை எனும் பிணைப்பு |
| 4 | ஹன்சாவலிய (அன்ன வரிசை) | உண்மை நிலையை விளங்கிக்கொள்ளல் |
| 5 | எளிமையான கொடிவலை | பிணைப்புகளிலிருந்து விடுபடல் |
| 6 | அரைத்தாமரை | முக்தி நிலை |

**பல்வேறு காலப்பகுதிகளுக்குரிய உயர் கலைப்பண்புகளைக் கொண்ட சந்திர வட்டக்கற்கள்.**

அனுராதபுரக் காலம்
**இராணி மாளிகையின் (மகாசென் மாளிகை) சந்திரவட்டக்கல்**

பொலன்னறுவைக் காலம்
**வட்டதாகேயின் சந்திரவட்டக்கல்**

கண்டிக் காலம்
**தலதாமாளிகையின் சந்திரவட்டக்கல்**


அனுராதபுரக் காலம்


பொலன்னறுவைக் காலம்


கண்டிக் காலம்

## <u>வினாக்கள்</u>

1.சந்திரவட்டக்கல் என்றால் என்ன என்பதை விபரிக்குக.

2.அனுராதபுரக் காலத்திலிருந்து கண்டிக்காலம் வரையுள்ள சந்திரவட்டக்கல்லின் பரம்பலை விபரிக்குக.

3.சந்திர வட்டக்கல்லின் செதுக்கல்கள் தொடர்பான பேராசிரியர் செனரத் பரனவிதானவின் கருத்தைக் குறிப்பிடுக.

4.வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்து முக்கிய குறிப்புகளை உமது பயிற்சிக் கொப்பியில் எழுதிக்கொள்க.